


ISBN 978-93-47021-22-0
9 789347 021220
TODAY PUBLICATIONS

தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்

# தமிழர் வாழ்வியல்
# அன்றும் இன்றும்

## (கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு)



தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
கொரட்டூர் சென்னை -50

# தமிழர் வாழ்வியல்

## அன்றும் இன்றும்

தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் ச. வசந்தி**

**முனைவர் நி.நதியா**

**முனைவர் சு.சசிகலா**

**திருமதி. வி.சி.சித்ரா**

**டுடே பதிப்பகம்**

திருவல்லிக்கேணி

சென்னை – 600 005.

<u>நூல் விவரக் குறிப்பு</u>

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்** |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் ச. வசந்தி |
| | : | முனைவர் நி.நதியா |
| | : | முனைவர் சு.சசிகலா |
| | : | திருமதி. வி.சி.சித்ரா |
| உரிமை | : | தொகுப்பாசிரியர்கள் |
| பொருள் | : | ஆய்வுக்கட்டுரைகள் |
| பதிப்பு | : | பதிப்பு மார்ச்சு, 2026 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி கொரட்டூர், சென்னை – 50. |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | 1/8, டெம்மி |
| அச்சகம் | : | டுடே பிரிண்டர்ஸ் சென்னை-5 |
| பக்கம் | : | 636 |
| விலை | : | ரூ 700/- |
| ISBN | : | 978-93-47021-22-0 |

(ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை)

**திருமதி சு.கலைமதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை - 117

**முனைவர் சி.கமலக்கண்ணன்**
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை - 117

# அறம் - அன்றும் இன்றும்

**முன்னுரை**

அறம் என்பது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளம். சங்க காலம் முதல் இன்று வரை, அறம் என்பது தமிழ் இலக்கியங்கள் மற்றும் வாழ்வில் முக்கிய இடம் வகிக்கிறது, இதுவே ஒரு சிறந்த சமூகம் உருவாவதற்கான அடிப்படைக் கோட்பாடாகும்.

**ஆய்வு நோக்கம்**

தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர். இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர். சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம். மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒருதுளி. அவனுக்குள்ளே சமூகம் - சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். வீரத்தைப் போல் கொடையும் தமிழர்களால்

விரும்பப்பட்டது. காலங்கள் மாறினாலும், மனித நேயம், ஈகை மற்றும் போர் தவிர்த்தல் போன்ற அடிப்படை அறங்கள் மாறக்கூடாது என்று தமிழ் இலக்கியங்கள் கூறும் அறத்தைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கியம் காட்டும் நெறிகள்**

இலக்கியம் என்பது ஒரு மொழியின் பண்பட்ட வெளிப்பாடாகும். இந்த வரையறையின் கீழ் இலக்கியத்தை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை ஒன்று கலை இலக்கியம், மற்றொன்று அறிவியல் இலக்கியம் ஆனால் பொதுவாக கவிதை, உரைநடை, நாடகம் போன்ற கலை இலக்கிய படைப்புகள் மட்டுமே அறியப்படுகின்றன. அறிவியலைக் காட்டிலும் கலை அழகியலின் வெளிப்பாட்டை இன்றியமையாததாக இலக்கியம் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் இலக்கியங்களில் அற நெறிகள் பற்றி எவ்வாறு தெளிவாக விளக்கப்படுகின்றன என்பதனைக் கீழ்க்காணும் இலக்கியங்கள் கூறும் கருத்துக்கள் மூலம் காணலாம்.

**வள்ளுவர் காட்டும் அறம்**

ஒருவர் பொறாமை, பேராசை, கடுஞ்சொல் மற்றும் கோபம் இந்த நான்கையும் தன்னுடைய வாழ்நாளில் வராமல் கடைபிடித்து வாழ்பவனே அறவழியில் வாழ்ந்து வருகிறான் என்பதனை,

**"அழுக்காறு அவா, வெகுளி ,இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்." (குறள் 35 )**

என்ற குறள் வழி அறியலாம். மேலும் கிடைத்ததை பகுந்து கொடுத்து, தானும் உண்டு பல உயிர்களைக் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும் என்பதனை

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"(குறள் 322)**

என்ற குறள் உணர்த்துகிறது. ஔவையின்

## ஆத்திச்சூடி காட்டும் அறம்

எந்த ஒரு செயல் செய்தாலும் அதனை விரும்பி தான் செய்ய வேண்டும். நமக்கு விருப்பம் இருந்தால்தான் அதற்காக நேரம் செலவு செய்வோம். பணம் செலவு செய்வோம். இன்னும், இன்னும் செய்ய வேண்டும் என்று தோன்றும். எது எல்லாம் நமக்கு விருப்பமோ அது நமது சிந்தனையில் இருக்கும். விரும்பினால் மகிழ்ச்சியாக செய்வோம். இங்கு ஔவை விளக்குவது என்னவென்றால் அறம் செய்வதை விருப்பத்துடன் செய்ய வேண்டும் என்று தான் விளக்குகிறார். அறம் என்றால் தானம், தர்மம் என்ற பொருள் மட்டுமல்ல அறவழியில் நின்று தன் வாழ்நாளில் ஒழுக்கத்தை கடைபிடித்து வாழ்வது. இதனை

**அறம் செய்ய விரும்பு... (ஆத்திச்சூடி - 1)**

என்ற அடியில் குறிப்பிடுகின்றார். தன்னிடம் உள்ள உணவை தான் மட்டுமே உண்ணாமல் அடுத்தவருடன் பகிர்ந்து சாப்பிடு, குறிப்பாக இல்லார்க்குப் பகிர்ந்து அளித்து உண் என்பதை,

**“ஐயம் இட்டு உண்.”**

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்

## சிலப்பதிகாரம் கூறும் அறம்

ஆட்சி செய்வதில் தவறிழைத்தவர்களை அறம் தண்டிக்கும். ஊழ்வினை விடாது பற்றித் தொடரும். கற்புடைய பெண்டிரை உயர்ந்தவர்கள் போற்றுவார்கள். இதுபோன்ற அறம் சார்ந்த கருத்துக்களை கீழ்க்கண்ட வரிகள் சுட்டிக் காட்டுகிறது.

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்**

## நாலடியார் கூறும் அறம்

அழகும் இளமையும் மிகுந்த செல்வம் ஒருநாள் அழிந்துவிடும். காலம் செல்லச் செல்ல இவையும் சென்று விடும் என்பது இயற்கை நியதி.

செல்வத்தின் மூலம் நற்செயல்கள் எதையும் செய்யாது வீணாக காலத்தை கழிப்பவனுடைய வாழ்க்கை உயர்ந்த வாழ்க்கை என்று கூறுவது தவறாகும். இவ்வாறு வாழ்பவனுடைய வாழ்வு வாழ்ந்தாலும் விழுந்ததற்கு சமம் என்று நாலடியார் கூறுகிறது .

**"உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்**
**ஒருவழி நில்லாமை கண்டும் - ஒருவழி**
**ஒன்றேயும் இல்லாதவன் வாழ்க்கை உடம்(பு)இட்டு**
**நின்று வீழ்ந் தக்க (து)உடைத்து" (39)**

## மணிமேகலை காட்டும் அறம்

மனிதனுடைய அன்றாட தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றில் பூர்த்தி செய்து வாழ வேண்டும். அதனை நல்ல வழியில் பெற்று இல்லாதவர்கள் கொடுத்து வாழ வலியுறுத்த வேண்டும் என்பதனை 'அறமெனப்படுவது' என்ற வரிகளில் மூலம் உணர்த்துகிறார்.

**அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லதுகண்டதில்**
**(ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை 228- 230)**

## சிறுபஞ்சமூலம் கூறும் அறம்

நமக்கு சிறுபஞ்சமூலம் என்ன சொல்கிறது என்றால் ஐந்து செயல்கள் செய்பவர்கள் அறநெறியில் செல்வார்கள் என்று கூறுகிறது .ஒன்று குளம் வெட்டுகிறவன் இரண்டு நீர் வழிந்து ஓட வாய்க்காலமைப்பவன், மூன்று புது கிணறு அமைப்பவன், நான்கு விளை நிலம் உருவாக்குபவன் ஐந்து மரத்தினை நடுபவன் இந்த ஐந்து செயல்களை யார் செய்கிறார்களோ அவர்கள் அறநெறியில் செல்வார்கள் என்று சிறுபஞ்சமூலம் நமக்கு விளக்குகிறது.

## மாற்றமும் சவால்களும்

அன்று அறம் என்பது தனிமனித ஒழுக்கமாகத் தொடங்கியது; இன்று அது உலகளாவிய நீதியாக (Global Justice) மாறியுள்ளது. இருப்பினும்,

சுயநலம் மற்றும் பேராசை காரணமாக இன்று அறநெறிகள் நலிவடைந்து வருவதை நாம் காண்கிறோம். "எங்கு அறம் இருக்கிறதோ அங்குதான் வெற்றி இருக்கும்" என்ற காந்தாரியின் வாக்கு இன்றும் பொருந்தும்.

சமூகப் பொருள் உற்பத்தியில் லாப நோக்கத்தோடு செயல்படுகின்ற நிறுவனங்களின் இன்றைய நடைமுறையானது இயற்கையின் மீது பகை முரணாக அமைகிறது. மனித இயற்கையானது திட்டமிடப்படாத இயற்கை சூழல்களில் திட்டமிட்ட மாற்றங்களை நிகழ்த்துவதாகும். இத்தகைய மாற்றங்கள் இயற்கை மீதான நட்பு முரணாகவே கட்டமைந்து வந்திருந்தன. இந்த மனிதர்களின் உலகம் மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது என்ற உண்மையை ஒப்புக் கொள்வது தான் அறம் ஆகும். சூழலை நேருக்கு நேர் எதிர்த்துச் செல்வது இந்த காலகட்டத்தில் அறமாக இருக்கிறது.

சமூகப் பொறுப்பற்ற சுயநல வெறிப் பண்பாட்டை எதிர்ப்பதும் சமூக பொறுப்புடையவர்களாக மனிதர்கள் ஒருங்கிணைவதும் அதன் மகத்துவத்தை சமூக ஆழ்மனம் வரை நெகிழ்ச்சியூட்டும் அழகியலாகப் படைத்துக் காட்டுவதும் தான் இந்த காலகட்டத்திற்கு இலக்கியம் போதிக்கும் அறமாக விளக்கம் பெறுகின்றது.

**அறம் - இன்று**

இன்றைய வேகமான உலகில் அறம் என்பது புதிய பரிமாணங்களை எடுத்துள்ளது:

**சமூக அறம்**

சமூக அறம் (Social Ethics/Morality) என்பது தனிமனித ஒழுக்கத்தைத் தாண்டி, சமூகம், சக மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழலோடு இணக்கமாக வாழும் அறநெறியைக் குறிக்கிறது. இது பிறருக்கு உதவும் பண்பு, சமத்துவம், நீதியான நடத்தை மற்றும் சமூகக் குற்றங்களைத் தவிர்த்து, கூட்டு வாழ்வை மேம்படுத்தும் விழுமியங்களை அடிப்படையாகக்

கொண்டது. சாதி, மத பேதமின்றி மனித நேயத்துடன் பழகுவது மற்றும் இயற்கையைப் பாதுகாப்பது இன்றைய காலத்தின் கட்டாய அறமாகும்.

**ஊடக அறம்**

போலிச் செய்திகளைத் தவிர்த்து, உண்மையை மட்டும் சமூகத்திற்குத் தருவது நேர்மை மற்றும் பொறுப்புணர்வை வலியுறுத்துவதாகும். இது தகவல்களின் உண்மைத்தன்மை, நடுநிலைமை, தனிமனித உரிமை பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புடன் கூடிய செய்தியறிக்கையை உறுதி செய்கிறது. ஊடகங்களுக்குரிய அறமாகப் பார்க்கப்படுகிறது.

**தொழில் அறம்**

வணிகத்திலும் நிர்வாகத்திலும் நேர்மையைக் கடைப்பிடிப்பது இன்றைய நவீன சமூகத்தின் முதுகெலும்பாக உள்ளது.

**உயிரிரக்கம்**

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே அறத்தின் மையக்கரு என்று இன்றும் வலியுறுத்தப்படுகிறது.

காலங்கள் மாறினாலும், மனித நேயம், ஈகை மற்றும் போர் தவிர்த்தல் போன்ற அடிப்பட அறங்கள் மாறக்கூடாது. "எங்கு அறம், அங்கு வெற்றி" என்பதை உணர்ந்து, தற்காலத்திற்கு ஏற்ற அறத்தை நாம் பின்பற்ற வேண்டும்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் அறம் என்று பார்த்தோமானால் சங்க வாழ்க்கையில் எது உயர்வான பண்பாடோ, அதுவே அறமாகப் பார்க்கப்பட்டது. அகம் சார்ந்த வாழ்க்கை காதலைப் பற்றியும் புறம் சார்ந்த வாழ்க்கை வீரத்தை பற்றியும் பேசக் கூடியது . வீரம் என்பது போர்க்களத்தில் பகைவருடன் போரிடும்போது புறமுதுகு காட்டி ஓடக்கூடாது, எதிரியை ஜெயிக்க வேண்டும். இல்லையென்றால் எதிரியை நேருக்கு நேராக எதிர்த்து நெஞ்சில் குத்து வாங்கி சாக வேண்டும்.

அதுதான் அறம் ஆகும். காதல் வாழ்க்கையில் தோழி தலைவியின் ரகசியத்தை காப்பாற்றுவது, அதேபோல தலைவியின் காதலுக்கு உண்மையாக இருக்கிறது போன்றவற்றை தொல்காப்பியர் அறத்தோடு நிற்றல் என்று குறிப்பிடுகிறார். மேலும் தலைவி தன்னுடைய காதலை முதலில் தோழியிடம் தான் தெரியப்படுத்த வேண்டும். அதனை தோழி செவிலித்தாயிடம் சொல்ல வேண்டும். செவிலித்தாய் அதை நற்றாயிடம் சொல்ல வேண்டும். இப்படித்தான் காதல் திருமணத்தை நோக்கிச் செல்ல வேண்டும். இதைத்தான் தொல்காப்பியர் அறத்தோடு நிற்றல் என்று குறிப்பிடுகிறார். அதன் பின்பு வந்த பக்தி இலக்கிய காலகட்டத்தில் பக்தியினால் மக்களின் சிந்தனை மழுங்கடிக்கப்பட்டது. அறம் பற்றி மக்கள் சிந்திக்கவில்லை. மீண்டும் மக்கள் பக்தியிலிருந்து பகுத்தறிவை நோக்கி எழுச்சி பெறத் தொடங்கிய காலத்தில் பகுத்தறிவின் இலக்கும், சமூகப் பொறுப்பும் இலக்கியத்தின் அறமாகக் கட்டமைந்தன. இன்றைய காலகட்டத்தின் வாழ்வியல் சூழலில் நம் கடைபிடிக்க வேண்டிய அறமும், இலக்கியமும் முன்நிறுத்தக்கூடிய அறமும் எதுவாக இருக்க முடியும் என்பதை உறுதி செய்வது இலக்கிய அறிவியலின் சமூகக் கடமையாகும்.

**துணை நின்ற நூல்கள்**


1. இரா. ராதாகிருஷ்ணன் ; நீதி நூல்கள் ஏழு; தெளிவுரை; கவிஞர் - சிவகுரு பதிப்பகம் -சென்னை (2021).
2. கே டி கே தங்கமணி ;மணிமேகலை பற்றி ; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்; சென்னை (ஆகஸ்ட்- 1988)
3. டாக்டர் சி பாலசுப்பிரமணியன்; வாழ்வியல் நெறிகள்; நறுமலர் பதிப்பகம் (சென்னை டிசம்பர் 1990)
4. புதியவன் முனைவர் சிவக்குமார் கே.---- இலக்கிய அறிவியல்---- இணையம் கிண்டில் அமேசான்—2021
5. பத்தாம் வகுப்பு - தமிழ் உரைநடை உலகம்- சங்க இலக்கியத்தில் அறம்.( பக்கம் 184 முதல் 187 வரை) தமிழ் அரசு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (2019)
6. விந்தியா கௌரி- ( May 2021) “நாலடியாரில் வாழ்வியல் அறங்கள்”

7. புறநானூறு மூலமும் உரையும், புலியூர் கேசிகன், சரண் பதிப்பகம், சென்னை. - Purananuru: Text and Commentary, by Puliyur Kesikan. Saran Pathippagam, Chennai.
8. திருக்குறள் மூலமும் உரையும், பரிமேலழகர், அருணா பதிப்பகம், சென்னை. - Thirukkural: Text and Commentary, by Parimelazhagar. Aruna Pathippagam, Chennai.